# மெட்ரோ ரயில்வே தொழிலாளர்களுக்கு டெங்கு விழிப்புணர்வு

**சென்னை, அக். 21:** மெட்ரோ ரயில்வே பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் கூறியது: சென்னை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் சார்பில், மெட்ரோ ரயில் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு டெங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. டெங்கு முன்னெச்சரிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

மெட்ரோ ரயில்வே திட்டப் பணிக்காக அண்ணாசாலை முதல் திருவொற்றியூர் வரை ரயில் பாதை அமைக்கும் இடத்தின் அருகே வடமாநில தொழிலாளர்கள் தங்கியுள்ளனர். அவர்களுக்கு டெங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் தங்கி இருக்கும் இடத்தை சுத்தமாக வைத்து கொள்வது, சுத்தமான குடிநீரை பருகுவது உள்பட பல்வேறு அறிவுரை வழங்கப்பட்டன. இதுதவிர, ஒவ்வொரு மெட்ரோ ரயில் நிலையத்திலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு மெட்ரோ ரயில் நிலையத்தை சுத்தமாக வைத்து கொள்வது, ரயில் நிலையத்தை சுற்றி தண்ணீர் தேங்காமல் உடனடியாக அகற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றனர்.